# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,936/4 — 1970 දෙසැම්බර් 17 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.12.17

14,936/4 ம் இலககம் —1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)–பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ. 16/54.

### கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச் சட்டம்

#### 40 ஆம் பிரிவிற்கமைந்த மூடும் கட்டளை

1965ம் ஆண்டின் 17ம் இல. விடுமுறை அதிகாரச்சட்டத்தின் 11ம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1966ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ம் தேதியன்று வெளிவந்த 14,726/12ம் இல. விசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் திருத்தியமைக்கப்பட்ட (129ம் அத்தியாயமாகிய) கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச் சட்டத்தின் 40ம் பிரிவின்படி தொழில் அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, மேற்கூறிய கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச்சட்டத்தின் 42 ம் பிரிவிற்கமைய செனெற் சபையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட கட்டளை.

எம். பி. டி இஸற். சிறிவர்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் டை.

### கட்டளை

1. இக்கட்டளையானது, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட பிரதேசமொவ்வொன்றிலும் அமைந்துள்ள கடையொவ்வொன்றுக்கும் இயைபுடையதாகும்.

2. இக்கட்டளையின் 4ம், 5ம் பந்திகளில் வேறுவகையில் வெளிப்படையாக விதிக்கப்பட்டிருந்தாலன்றி, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட பிரதேசங்களுள் எவற்றிலாயினும் அமைந்த கடையொவ்வொன்றும் (3ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைந்த கடையெதுவும் நீங்கலாக) —

(அ) ஒவ்வொரு காலவரையிலும் போயா நாள் தவிர்ந்த நாளொவ்வொன்றிலும் காலை 8 மணிவரையிலும்,

(ஆ) ஒவ்வொரு காலவரையிலும் போயா நாள் தவிர்ந்த நாளொவ்வொன்றிலும் இரவு 9 மணிக்கும் அதன் பின்னரும்,

(இ) ஒவ்வொரு காலவரையிலும் போயா நாள் முழுவதிலும் வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியாவண்ணம் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. இக்கட்டளையின் 5ம் பந்தியில் வேறுவகையில் வெளிப்படையாக விதிக்கப்பட்டிருந்தாலன்றி, இதன்கீழ்க் குறிக்கப்பட்டவையும் இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட எப்பிரதேசத்திலும் அமைந்துள்ளவையுமான கடைகளின் வகுப்புகள்—

(அ) ஒவ்வொரு காலவரையிலும் ஒவ்வொரு நாளும் காலை 8 மணிவரையிலும்,

(ஆ) ஒவ்வொரு காலவரையிலும் ஒவ்வொருநாளும் இரவு 9 மணிக்கும் அதன் பின்னரும்,—

(i) இறைச்சிக்காரர் கடைகள்,

(ii) புதிய மீன் விற்கப்படும் கடைகள்,

(iii) பூ விற்போர் கடைகள்,

(iv) ஐஸ் வியாபாரிகள் கடைகள்,

(v) படம் பிடிப்பவர் கடைகள்,

(vi) பின்வருவனவற்றில் ஒன்றையோ பலவற்றையோ விற்கும் கடைகள் :
உடன்பழம், உடன்மரக்கறிவகை, வெற்றிலை, தின்புகையிலை, பாக்கு, புல், வைக்கோல், பிண்ணாக்கு,

(vii) புகையிலைப் பொருள்கள் விற்போர் கடைகள்,

வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியாவண்ணம் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட எப்பிரதேசத்திலும் அமைந்துள்ள கடையெதுவும் இக்கட்டளையின் 2ம் பந்தியின் ஏற்பாடுகளின்படி எக்காலவரையிலும் வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியாவண்ணம் மூடப்பட்டிருக்கவேண்டுமெனினும், தொழில் ஆணையாளரின் எழுத்துமூலமான அனுமதியுடன் அவ்வண்ணம் எழுத்திற் குறிக்கப்பட்ட எக்காலத்தின்போதும் வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியும்வண்ணம், பின்வரும் நிபந்தனைக்கமைய அதாவது, ஒவ்வொரு காலவரையிலும் குறிக்கப்பட்ட ஒரு நாள் முழுவதிலும் அக்கடை மூடப்பட்டிருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனைக்கமைய திறந்திருக்கலாம்.

5. இக்கட்டளையின் 2ம் அல்லது 3ம் பந்தியின் ஏற்பாடுகள் அல்லது 4ம் பந்தியின் கீழ் தொழில் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு எப்படியேனுமிருப்பினும்—

(1) பின்வரும் நாட்களொவ்வொன்றுக்கும் நேரேமுந்திய பதினன்கு நாட்களிலும், அதாவது நத்தார்த் திருநாள், சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள், முஸ்லீம் அச்சிப் பெருநாள், சிங்கள வெசாக் மாதத்தின் பௌர்ணமித் திருநாளுக்குப் பிந்திய இரண்டாவது நாள், இந்து தீபாவளித் திருநாள், 1965ம் ஆண்டின் 17ம் இல. விடுமுறை அதிகாரச் சட்டத்தின் கீழ் றம்ழானின் முடிவின் மறுநாளென உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்படும் நாள் ஆகியன—

இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட பிரதேசங்களுள் எவற்றிலாயினும் அமைந்துள்ள கடையெதுவும் வாடிக்கைக் காரருக்குச் சேவைபுரியும்வண்ணம்—

ஒவ்வொரு காலவரையினும் நாளொவ்வொன்றிலும் காலை 8 மணியிலிருந்து இரவு 9 மணிவரையும் ஆனால் அதற்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(2) கொழும்பு கதிர் வேலாயுத சுவாமி கோயில் இந்து வேல்த் தேர்த் திருவிழாவின் கடைசிநாளன்று முடிவடையும் ஏழு நாட்களில் கொழும்பு மாநகரசபையின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள எக்கடையும் வாடிக்கைக்காரருக்குச் சேவையுரியும்வண்ணம் அத்தகைய நாளொவ்வொன்றிலும் காலை 8 மணி முதல் நள்ளிரவுவரையில் ஆனால் நள்ளிரவுக்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(3) எசலப்பெரஹராவின் கடைசி நாளன்று முடிவடையும் பதினன்கு நாட்களில், கண்டி மாநகர சபையின் நிருவாக எல்லைகளுக்குள் இருக்கும் எக்கடையும் வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியும் வண்ணம் அத்தகைய நாளொவ்வொன்றிலும் காலை 8 மணி முதல் நள்ளிரவுவரையும் ஆனால் நள்ளிரவுக்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(4) சிங்கள எசல, நிக்கினி மாதங்களில் பௌர்ணமி நாளுக்கு மறுநாள் முடிவடையும் ஏழு நாட்களில் இதனகத்தேயுள்ள அட்டவணையின் (3)ம் பந்தியில் விவரிக்கப்பட்ட பிரதேசத்திலமைந்துள்ள எக்கடையும் வாடிக்கைக்காரருக்குச் சேவை புரியும்வண்ணம் அத்தகைய நாளொவ்வொன்றிலும் காலை 8 மணி முதல் நள்ளிரவுவரையும் ஆனால் நள்ளிரவுக்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(5) சிங்களப் போசன் மாதத்தின் பௌர்ணமி நாளுக்கு மறுநாள் முடிவடையும் ஏழு நாட்களில், இதனகத்தேயுள்ள அட்டவணையின் (3)ம் பந்தியில் விவரிக்கப்பட்ட பிரதேசத்திலமைந்துள்ள எக்கடையும் வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியும் வண்ணம் அத்தகைய நாளொவ்வொன்றிலும் காலை 8 மணி முதல் நள்ளிரவுவரையும் ஆனால் நள்ளிரவுக்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(6) கடைசி நாளாகிய தேர்த் திருவிழாவன்று முடிவடையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆண்டுத் திருவிழாவின் இருபத்தாறு நாட்களில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள எக்கடையும் வாடிக்கைக்காரருக்குச் சேவை புரியும்வண்ணம் அத்தகைய நாளொவ்வொன்றிலும் காலை 8 மணி முதல் நள்ளிரவுவரையும் ஆனால் நள்ளிரவுக்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

(7) பிரயாணிகள் கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்திலிருக்கும் எந்நாளிலும், கோட்டையிலமைந்துள்ள எக்கடையும் வாடிக்கைக் காரருக்குச் சேவைபுரியும் வண்ணம் தொழில் ஆணையாளரால் அதற்கென விடுக்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றின் அதிகாரத்தின் கீழ் காலை 8 மணி முதல் இரவு 11 மணிவரையும் ஆனால் அதற்குப் பிந்தாமல் திறந்திருக்கலாம்.

6. பின்வரும் கடைகளின் வகுப்புகள் இக்கட்டளையின் முற்போந்த ஏற்பாடுகளினின்றும் இத்தால் விலக்கப்படுகின்றன—

(அ) உணவுச்சாலைகள், வதிவு விடுதிகள், போசனசாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், தேனீர்க் கடைகள்.

(ஆ) பெற்றோல் சேவை நிலையங்கள்.

(இ) பாற்பண்ணைகளும் பாற்சாலைகளும்.

(ஈ) படக்காட்சி மண்டபங்கள், நர்த்தசாலைகள் மற்றும் பொதுக் களியாட்ட அல்லது கேளிக்கைச் சாலைகள்.

(உ) செய்தித் தாள்களும் மற்றும் சஞ்சிகைகளும் மாத்திரம் விற்கப்படும் கடைகள்.

(ஊ) புகைவண்டி நிலையங்களில் அல்லது உணவு விடுதிகளிலுள்ள புத்தகசாலைகள்.

(எ) பாண் போறணைகள்.

(ஏ) கப்பல்களுக்கு மொத்தமாக அல்லது சில்லறையாகப் பொருள்கள் வழங்கும் தொழிலைநடத்தும் கடைகள்.

(ஐ) குடிவகை விற்கப்படும் கடைகள்.

(ஒ) மூலிகைகள் விற்கப்படும் கடைகள்.

(ஓ) பெற்றோல் எண்ணெய்க் குதங்களும், பெற்றோலெண்ணெய்ச்சாலைகளும்.

7. இக்கட்டளையில், சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு பொருள் கொள்ளவேண்டியிருந்தாலன்றி, " காலவரை " என்னும் பதம் ஏதாயினுமொரு போயா தினத்திற்கு நேரே முந்திய நாளிரவின் நள்ளிரவுக்கும் அடுத்துவரும் போயா தினத்திற்கு நேரே முந்திய நாளிரவின் நள்ளிரவுக்குமிடையேயுள்ள காலமெனப் பொருள்படும்.

8. இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட நிருவாகப் பிரதேசங்களின் நிலையில் அல்லது எல்லைகளில் மாற்றம் ஏதாயினும் மற்றும் எச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழாயினும் செய்யப்படினும், இக்கட்டளை நடைமுறையிலிருத்தல் வேண்டும். அத்துடன் அந்நிருவாகப் பிரதேசங்கள் சரியாக விவரிக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. (129 ம் அத்தியாயமாகிய) கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச்சட்டத்தின் 40 ம் பிரிவிற்கமைய ஆக்கப்பட்டு, 1967 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் தேதியன்று வெளிவந்த 14,739/7 ம் இல. விசேட கசெற்றிற் பிரசுரமான கட்டளை இத்தால் நீக்கப்படுகின்றது.

## அட்டவணை

(1) பின்வரும் மாநகரசபைகளொவ்வொன்றின் நிருவாக எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்கள்—

பதுளை, கொழும்பு, மட்டக்களப்பு, தெகிவலை–கல்கிசை, காலி, யாழ்ப்பாணம், கண்டி, குருநாக்கல், மாத்தளை, நீர்கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி.

(2) பின்வரும் நகரசபைகளின் நிருவாக எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்கள்—

அம்பலாங்கொடை, அவிசாவலை, பலாங்கொடை, பண்டாரவளை, பேருவலை, சாவகச்சேரி, சிலாபம், கம்பகா, கம்பளை, அம்பாந்தோட்டை, அப்புத்தளை, அற்றன்–டிக்கோயா, ஒறணை, ஜாயெலை, கடுகண்ணுவை, களுத்துறை, கேகாலை, கொலன்னுவை, கோட்டே, குளியாப்பிட்டி, மாத்தறை, மொறட்டுவை, நாவலப்பிட்டி, பாணந்துறை, பேலியகொடை, பருத்தித்துறை, புத்தளம், தலவாக்கொல்லை–லிந்துல, தங்காலை, திருக்கோணமலை, வவுனியா, வத்தளை–மாபோலை, வத்தேகம, வெலிகமை.

(3) (கிழக்கு, மேற்கு) நுவரகம் பலாத்த பிரிவுக் காரியாதிகாரிகள் பிரிவுகளுள் அமைந்ததும், வடக்கிலும் வடகிழக்கிலும் புளியங் குளத்தையும் (எப்விபி 164), நல்லபாம்புக் குளத்தையும் (எப்விபி 174), கிழக்கில் பழைய குளத்தையும் (எப்விபி 247), கூழாங் குளத்தையும் (எப்விபி 248), ஈச்சங் குளத்தையும் (எப்விபி 255), மகாகலகவேவாவையும் (எப்விபி 254), தெற்கிலும் தென் கிழக்கிலும் குடப்பள்ளாடிக் குளத்தையும் (எப்விபி 261), அத்திக் குளத்தையும் (எப்விபி 260), தம்மன்ன குளத்தையும் (எப்விபி 266), மேற்கிலும் தென்மேற்கிலும் வடமேற்கிலும் மல்வத்து ஓயாவையும் எல்லைகளாக உடையதுமான பிரதேசம்.

12–915

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.